| | |
|---|---|
| அனுப்புநர் | பெறுநர் |
| ந.லதா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | 1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.<br>2. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் (இடைநிலை மற்றும் தனியார் பள்ளிகள்),. |

ந.க.எண். 004517 /எப்.1/2025 நாள் : 14.05.2025

ஐயா/அம்மையீர்,

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – மார்ச் 2025, மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வுகள்– அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியல் (TML) – அனைத்துப் பள்ளிகளும் ஆன்–லைன் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்வது தொடர்பான அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை :** அரசாணை (நிலை) எண். 14, நாள். 29.01.2018.

-----

2024–2025 – ஆம் கல்வியாண்டில் மேல்நிலை முதலாம் ஆண்டு பயின்ற பள்ளி மாணவர்களின் பொதுத் தேர்வு முடிவுகள் **16.05.2025 (வெள்ளிக் கிழமை) அன்று பிற்பகல் 2.00 மணிக்கு** வெளியிடப்படவுள்ளது, .

முதன்மைக் கல்வி அலுவலர்கள் / மாவட்டக் கல்வி அலுவலர்கள், தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு 16.05.2025 **அன்று** www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று, தங்கள் பள்ளிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள User–ID மற்றும் Password–ஐ பயன்படுத்தி, மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை (TML) **பிற்பகல் 3.00 மணி முதல்** பதிவிறக்கம் செய்து கொள்ள அறிவுறுத்துமாறும், அதற்குத் தேவையான அனைத்து முன்னேற்பாடுகளையும் தயார் நிலையில் வைத்திருக்க பள்ளித் தலைமையாசிரியர்களை அறிவுறுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

–2–

மேலும், முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் மாவட்டத்திற்கான அனைத்து பள்ளிகளின் தேர்வு முடிவுகள் மற்றும் பகுப்பாய்வு அறிக்கையினை **16.05.2025 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு** தங்களது User ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

ஓம்/-
இயக்குநர்

**நகல்:**

அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.